# வாரம் 4
# அமர்வு 04

All Rights Reserved © 2023
Verité Research

# அரச செலவினம் மற்றும் பற்றாக்குறையும் கடனும்

All Rights Reserved © 2023
Verité Research

# கலந்துரையாடலுக்கான பகுதிகள்

1. அரச செலவினம் தொடர்பான மேற்பார்வை
    - 1.1 அரச செலவினத்தின் கூறுகள்
    - 1.2 கடந்த காலப் போக்குகள்
    - 1.3 நாடுகளுக்கு இடையிலான ஒப்பீடுகள்
    - 1.4 துறைசார் பகுப்பாய்வு
2. செலவினத்துடன் தொடர்புடைய பிரச்சினைகள்
3. EFF கீழான செலவின கடமைப்பாடுகள்
4. பற்றாக்குறையும் கடனும்

All Rights Reserved © 2023
Verité Research

# 1.1 செலவினக் கூறுகள்

All Rights Reserved © 2023
Verité Research

# இலங்கை 2022ல் அதிகூடிய பற்றாக்குறையைப் பதிவுசெய்தது


**வரவு செலவுத்திட்ட நிலுவை**
**= வருமானம் – செலவினம்**

*2022ல்* வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை: *ரூ 2460* **பில்லியன்**

*2023க்கான* மதிப்பிடப்பட்ட வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை: *ரூ 2398* **பில்லியன்**

*2023* முதல் காலாண்டிற்கான உண்மையான வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை: ***ரூ 625 பில்லியன்***

செலவினக் கூறுகள் (ரூ.பில்லியனில்)





மூலம்: *2023 ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்*


All Rights Reserved © 2023
Verité Research

# 2022ம் ஆண்டில் செலவினக் கணக்கில் 35% வட்டிக் கொடுப்பனவுகளுக்குச் செலவிடப்பட்டுள்ளன

*பெறுமதிகள் ரூ. பில்லியனில்*

**அரசாங்கம் எதற்குச் செலவிட்டுள்ளது?** | **அரசாங்கம் எவ்வாறு அவற்றுக்கு நிதியளித்தன?**




மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022


All Rights Reserved © 2023
Verité Research

# 1.2 கடந்த காலப் போக்குகள்

*1.2.1 ஒட்டுமொத்த செலவினம்*


*1.2.2 செலவின விபரம்*

அ. வட்டிக் கொடுப்பனவுகள்

ஆ. சமூகத்திற்கான செலவினங்கள்

All Rights Reserved © 2023
Verité Research

# 2022 மற்றும் 2023ல் செலவினங்கள் பெறுமதியில் அதிகரித்துள்ளன, ஆனால் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகக் குறைந்துள்ளன





மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை (2022) | 2023 மதிப்பீடுகள்

குறிப்பு: கணக்கீட்டுப் பிழை சரிசெய்யப்பட்டுள்ளதால் 2019 மற்றும் 2020க்கான பெறுமதிகள் வித்தியாசப்படும்

All Rights Reserved © 2023
Verité Research

# வருமானத்தை விட செலவினம் அதிக வீதத்தில் அதிகரித்துள்ளதன் காரணமாக ஒவ்வொரு ஆண்டும் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது

பெறுமதிகள் ரூ. பில்லியன்களில்





மூலம்: ஒப்புதல் அளிக்கப்பட்ட வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023 | இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2022

All Rights Reserved © 2023
Verité Research

# கடந்த ஆறு ஆண்டுகளில் வட்டிக் கொடுப்பனவுகள் சராசரியாக மீண்டுவரும் செலவினங்களின் 40 சதவீதமாக உள்ளன

## மொத்த செலவின விபரங்கள்





மூலம்: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023 | நிதியமைச்சு ஆண்டறிக்கை 2022
குறிப்பு: வட்டிக் கொடுப்பனவுகள் மீண்டுவரும் செலவினத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகை என கருதப்படுகிறது

All Rights Reserved © 2023
Verité Research


## அ) வட்டிக் கொடுப்பனவுகள்

# அதிகரித்துவரும் வட்டிக் கொடுப்பனவுகள் பிற செலவினங்களை விட அதிகரித்துவருகிறது

**2021 – 2022 காலப்பகுதியில் வட்டிக் கொடுப்பனவுகள் 49 சதவீதத்தால் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது**




**கடந்த ஆண்டுகளில் மொத்த செலவினத்தில் அதிக பங்களிக்கும் ஒன்றாக வட்டிக் கொடுப்பனவுகள் திகழ்கின்றன**






| 2013 – 2022க்கு இடையில் சராசரி வளர்ச்சி விகிதம் | சம்பளங்கள் மற்றும் வேதனங்கள் | வட்டிக் கொடுப்பனவுகள் | பரிமாற்றல் கொடுப்பனவுகள் | மூலதனச் செலவினம் | ஏனையவை |
|---|---|---|---|---|---|
| | **11%** | **15%** | **14%** | **10%** | **3%** |

மூலம்: நிதியமைச்சு ஆண்டறிக்கைகள் 2012 - 2022

All Rights Reserved © 2023
Verité Research

# வட்டிக் கொடுப்பனவுகளின் அதிகரிப்பு மற்றும் அரச நிறுவனங்களுக்குக் கடன் வழங்குதல் காரணமாக 2022ம் ஆண்டில் மொத்த செலவினம் 83 சதவீதத்தால் அதிகரித்துள்ளது








மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை (2022)


All Rights Reserved © 2023
Verité Research

# 2023 வரவு செலவுத்திட்ட உரையில் 49.5 பில்லியன் பெறுமதியான புதிய செலவின முன்மொழிவுகளில் 87% சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கானவை

சமூகப் பாதுகாப்பு திட்டங்களுக்கான செலவினங்கள்
(புதிய செலவின முன்மொழிவுகளின் மொத்தப் பெறுமதியின் சதவீதமாக)





சமூகப் பாதுகாப்பு திட்டத்தின் விபரம்




மூலம்: 2023 வரவு செலவுத்திட்ட உரை பின்னிணைப்புகள்

All Rights Reserved © 2023
Verité Research

# சமுர்த்தியில் ஏற்பட்ட 118% அதிகரிப்பு 2022ல் சமூகச் செலவினங்களின் மிகுதியான அதிகரிப்பிற்கு வழிவகுத்துள்ளது





மூலம்: ஆண்டறிக்கை 2022, இலங்கை நிதி அமைச்சு

All Rights Reserved © 2023
Verité Research

# *2022ல் சமுர்த்திக்கான ஒதுக்கீட்டை 118 சதவீதத்தால் அதிகரிக்கும் முன்பு இலங்கையின் சமூக செலவினம் அயல் நாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகக் குறைவாக இருந்தது*

அனைத்து சமூக உதவிகளுக்கான செலவினம் (மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




மூலம்: உலக வங்கி தரவுதளம்

குறிப்பு: சமூக உதவி (SA) செலவினம் என்பது நன்மைகள் மற்றும் நிர்வாகச் செலவுகளுக்கான செலவுகளைக் குறிக்கிறது. 2015-2021 காலப்பகுதியில் கிடைக்கும் மிகச் சமீபத்திய ஆண்டிற்கான திட்ட நிலை சமூக உதவித் தரவைத் திரட்டுவதன் மூலம் வருடாந்த சமூக உதவி செலவினம் கணக்கிடப்படுகிறது. செலவினங்கள் தரப்படுத்தப்பட்ட SA வகைகளாகப் பிரிக்கப்பட்டு பின்னர் ஒட்டுமொத்த SA செலவினங்களைக் கணக்கிடுவதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றன. குறிகாட்டியைக் கணக்கிடுவதற்கு மொத்த SA செலவினமானது நாட்டின் மொ.உ.உற்பத்தியால் (நடப்பு பெறுமதிகள்) பிரிக்கப்படுகிறது. மொ.உ.உ தரவு WB உலக அபிவிருத்திக் குறிகாட்டிகள் மூலம் பெறப்படுகிறது. இந்த ASPIRE தரவு சுமார் 80 சதவீதமான WBG நாடுகளை உள்ளடக்கியுள்ளதுடன் உயர் வருமானம் பெறும் நாடுகளைப் பிரதிநிதித்துவப்படுத்தவில்லை.


All Rights Reserved © 2023
Verité Research

# 1.3 நாடுகளுக்கு இடையிலான ஒப்பீடு

All Rights Reserved © 2023
Verité Research

# மொ.உ.உற்பத்தியில் இலங்கையின் அரச செலவினம் உலகிலேயே மிகக் குறைவானதாகும்


மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக செலவினம் *(2015-2022 வரையான 10 ஆண்டுகளின் சராசரியை அடிப்படையாகக் கொண்டது)*





மூலம்: IMF WEO தரவுதளம் | *சராசரி மதிப்பீடுகளைக் கணக்கிடுவதற்கு 2022 பெறுமதிகள் உள்ளடக்கப்பட்டுள்ளன*

All Rights Reserved © 2023
Verité Research

# மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் கல்விச் செலவினம் பிராந்தியத்திலுள்ள அநேகமான நாடுகளை விடக் குறைவாகும்




# மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக இலங்கையின் இராணுவச் செலவினம் பிராந்தியத்திலுள்ள அநேகமான நாடுகளை விட அதிகமாகும்





மூலம்: உலக வங்கி தரவுதளம்

குறிப்பு: உலக வங்கியின் பிரகாரம் இராணுவச் செலவினம் என்பதற்கான விளக்கம்:

அமைதி காக்கும் படைகள் உட்பட ஆயுதப் படைகளின் அனைத்து நடப்பு மற்றும் மூலதனச் செலவினங்கள், பாதுகாப்பு அமைச்சுக்கள் மற்றும் பாதுகாப்பு திட்டங்களில் ஈடுபட்டுள்ள ஏனைய அரச முகவரகங்கள், இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயிற்றுவிக்கப்பட்டதாகவும், ஆயுதம் ஏந்தியதாகவும் இருந்தால் துணை இராணுவப் படைகள், இராணுவ விண்வெளி நடவடிக்கைகள் ஆகியவை இராணுவச் செலவினங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அவ்வாறான செலவினங்களில் இராணுவ மற்றும் சிவில் பணியாளர்கள் (இராணுவத்தினரின் ஒய்வூதியங்கள் மற்றும் சமூக சேவைகள் உட்பட), நடவடிக்கை மற்றும் பராமரிப்பு; கொள்வனவு; இராணுவ ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி; இராணுவ உதவி (நன்கொடை அளிக்கும் நாட்டின் இராணுவ செலவினங்களில்) உள்ளடக்கப்பட்டுள்ளன. சிவில் பாதுகாப்பு மற்றும் படைவீரர்களின் நன்மைகள், ஆயுதங்களை அகற்றுதல், மாற்றுதல் மற்றும் அழித்தல் போன்ற முந்தைய இராணுவ நடவடிக்கைகளின் நடப்பு செலவினங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.

All Rights Reserved © 2023
Verité Research

# இலங்கையின் சுகாதார செலவினம் அதன் அயல்நாடுகளின் செலவினத்துடன் ஒத்துப்போகிறது




மூலம்: உலக வங்கி தரவுதளம்

குறைந்த நடுத்தர வருமானத்தைக் கொண்ட குழு. 2022 GNIயில் $1,136 - $4,465 தனிநபர் வருமானத்தைக் கொண்டவை குறைந்த நடுத்தர வருமான பொருளாதாரங்கள் ஆகும்


உயர் நடுத்தர வருமானத்தைக் கொண்ட குழு. 2022 GNIயில் $4,446 - $13,845 தனிநபர் வருமானத்தைக் கொண்டவை உயர் நடுத்தர வருமான பொருளாதாரங்கள் ஆகும்.

All Rights Reserved © 2023
Verité Research

# *1.4 துறைசார் பகுப்பாய்வு*

All Rights Reserved © 2023

# 2018ம் ஆண்டு முதல் பாதுகாப்புத் துறை செலவினம் பெறுமதியில் அதிகரித்த போதிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகக் குறைந்துவரும் போக்கு காணப்படுகிறது





மூலம்: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2013 – 2023

குறிப்பு: பாதுகாப்புத் துறையில் பாதுகாப்பு அமைச்சும் உள்ளடங்கியுள்ளது


All Rights Reserved © 2023
Verité Research

# கல்வி, சுகாதாரம், விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய ஒவ்வொரு துறைகளுக்கான 2023 ஒதுக்கீடு பாதுகாப்பு துறை ஒதுக்கீட்டை விடக் குறைவாகும்


## கல்வித் துறை





## சுகாதாரத் துறை




## விவசாயத் துறை




## மீன்பிடித் துறை





மூலம்: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2013 – 2023

குறிப்பு: கல்வித்துறையில் கல்வி அமைச்சு உள்ளடங்கியுள்ளது, சுகாதாரத் துறையில் சுகாதார அமைச்சு உள்ளடங்கியுள்ளது, மீன்பிடித் துறையில் மீன்பிடி அமைச்சு மற்றும் விவசாயத் துறையில் விவசாய அமைச்சு உள்ளடங்கியுள்ளன

குறிப்பு: வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளில் காலப்போக்கில் அமைச்சுக்களின் பெயர்கள் மாற்றப்படக்கூடும்

All Rights Reserved © 2023
Verité Research

# பாதுகாப்பு துறையின் உணவு மற்றும் சீருடைகளுக்கான மதிப்பிடப்பட்ட செலவினம் 2023ம் ஆண்டில் கல்வி அமைச்சின் வருடாந்த வரவு செலவுத் திட்டத்தின் ¼ பங்குக்குச் சமமாகும்





மூலம்: வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் 2023 | இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை

குறிப்பு: பாதுகாப்புத் துறையானது பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு ஆகியவற்றைக் கொண்டுள்ளது

All Rights Reserved © 2023
Verité Research

# அரச சம்பளங்களின் பாதியளவு பாதுகாப்புத் துறைக்குச் செலவிடப்படுகிறது

## சம்பளத்திற்கான மத்திய அரசாங்கத்தின் துறை வாரியான செலவினம் (2023 வரவு செலவுத்திட்ட மதிப்பீடு)




மூலம்: 2023 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள்
குறிப்பு 1: அரசுக்குச் சொந்தமான நிறுவனங்களின் சம்பளங்களும் வேதனங்களும் இந்த விளக்கப்படத்தில் உள்ளடக்கப்படவில்லை
குறிப்பு 2: தனிநபர் ஊதியங்களில் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், மேலதிக நேரம் மற்றும் விடுமுறைக் கொடுப்பனவுகள் மற்றும் பிற கொடுப்பனவுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன
குறிப்பு 3: "பாதுகாப்பு: பிற துறை" என்பதில் பாதுகாப்பு அமைச்சு ((முப்படைகளில் ஊதியம் தவிர்த்து) மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு என்பன அடங்கும்.
குறிப்பு 4: போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது, நலன்புரி மற்றும் சமூக சேவைகள் துறை மூன்று அமைச்சுக்களைக் கொண்டது, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபை ஒரு அமைச்சைக் கொண்டது, நீதித்துறை ஒரு அமைச்சைக் கொண்டது, சுகாதாரத் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, கல்வித் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, விவசாயத் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது, பாதுகாப்புத் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது,, ஏனைய துறை 17 அமைச்சுக்களைக் கொண்டன.
குறிப்பு 5: "ஏனையவை" என்பதில் நிதி, ஆற்றல் மற்றும் எரிசக்தி, சுற்றுலா, கைத்தொழில், குடிநீர் மற்றும் சுகாதாரம், நகர அபிவிருத்தி, வெளிநாட்டு அலுவல்கள் துறைகள் மற்றும் சிறப்பு செலவின அலகுகள் ஆகியவை அடங்கும்

All Rights Reserved © 2023
Verité Research


# 2. செலவினப் பிரச்சினைகள்

1. வருமானம் போதாமை/ குறைந்த நிதித் திறன்
2. திறனற்ற ஒதுக்கீடு
3. மோசமான திட்டமிடல்

All Rights Reserved © 2023

# 2022ல் அரச வருமானம் செலவினத்தின் 45 சதவீதத்திற்கு மட்டுமே போதுமானதாக இருந்தது


**2022ம் ஆண்டுக்கான அரச வருமானம் மற்றும் செலவினம்**




மூலம்: நிதி அமைச்சு ஆண்டறிக்கை 2022 | *பொது முதலீடுகளை மட்டும் உள்ளடக்கியது

All Rights Reserved © 2023
Verité Research


# மீண்டுவரும் செலவினத்தை ஈடுசெய்வதற்குக் கூட இலங்கையின் வருமானம் எப்போதும் போதுமானதாக இருந்ததில்லை




மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கைகள் | நிதி அமைச்சு அறிக்கை 2022 | மீண்டுவரும் செலவினத்தில் சம்பளங்கள் மற்றும் வேதனங்கள், ஓய்வூதியங்கள், பொருட்கள் மற்றும் சேவைகள், ஏனைய மானியங்கள், பரிமாற்றல்கள், வட்டிக் கொடுப்பனவுகள் ஆகியவை அடங்கியுள்ளன

All Rights Reserved © 2023
Verité Research


# 2010 – 2012 காலப்பகுதியில் சம்பளங்கள் மற்றும் வேதனங்களுக்கு வருமானத்தில் 50 சதவீதத்திற்கும் மேல் செலவிடப்பட்டுள்ளது




மூலம்: நிதியமைச்சு ஆண்டறிக்கைகள் | புதிய அடிப்படை ஆண்டை அடிப்படையாகக் கொண்டு 2015 ஆம் ஆண்டிலிருந்து மொ.உ.உ கணக்கிடப்பட்டுள்ளது

All Rights Reserved © 2023
Verité Research

# கடந்த ஐந்து ஆண்டுகளில் (2021 தவிர), கல்வி மற்றும் சுகாதாரத்தை விட பாதுகாப்பு மற்றும் நெடுஞ்சாலைகளுக்கு அதிக ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன





மூலம்: வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகளின் பல்வேறு பதிப்புகள் (2021-2023) | நிதியமைச்சு 2022 | இலங்கை மத்திய வங்கி 2022

All Rights Reserved © 2023
Verité Research

# கல்வி, சுகாதாரம் மற்றும் விவசாயத் துறைகளுக்கு வரவு செலவுத்திட்ட ஒதுக்கீடு செலவினத்தின் 11.4% மட்டுமே

*ரூ. பில்லியனில்*

## 2023 ஆம் ஆண்டிற்கான மதிப்பிடப்பட்ட துறை வாரியான ஒதுக்கீடு





வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் 2023

குறிப்பு: போக்குவரத்து மற்றும் தொடர்பாடல் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது, நலன்புரி மற்றும் சமூக சேவைகள் துறை மூன்று அமைச்சுக்களைக் கொண்டது, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, நீதித் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, சுகாதாரத் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, கல்வித் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, விவசாயத்துறை ஒரு அமைச்சைக் கொண்டது, பாதுகாப்புத் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, ஏனைய மத்திய அரசாங்கத் துறை நான்கு அமைச்சுக்களைக் கொண்டது, சக்தி மற்றும் ஆற்றல் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது, சுற்றுலாத் துறை ஒரு அமைச்சைக் கொண்டது, கைத்தொழில் துறை நான்கு அமைச்சுக்களைக் கொண்டது, குடிநீர் மற்றும் சுகாதாரத் துறை இரண்டு அமைச்சுக்களைக் கொண்டது, நகர அபிவிருத்தித் துறை ஐந்து அமைச்சுக்களைக் கொண்டது.

All Rights Reserved © 2023
Verité Research

# புதிய குறைநிரப்பு மதிப்பீடுகளுடன் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை 43 சதவீதத்தால் அதிகரிக்கும் (2022)


ரூ. பில்லியனில்




மூலம்: பாராளுமன்றச் செய்திகள் - https://www.parliament.lk/news-en/view/2595 | 2022 வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் | திருத்தப்பட்ட வருமான மதிப்பீடுகள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் உரையை அடிப்படையாகக் கொண்டது

All Rights Reserved © 2023
Verité Research

# ரூ.695 பில்லியன் குறைநிரப்பு மதிப்பீடு: இது எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது?




மூலம்: பாராளுமன்றச் செய்திகள் - https://www.parliament.lk/news-en/view/2595

All Rights Reserved © 2023
Verité Research

# 2. சர்வதேச நாணய நிதியத் திட்டம் மற்றும் செலவின முன்மொழிவுகள்

All Rights Reserved © 2023
Verité Research

# சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கடமைப்பாடுகள்

| சர்வதேச நாணய நிதியத் திட்டத்தின் கடமைப்பாடுகள் | முடிவுத் திகதி | தற்போதைய நிலை |
|---|---|---|
| மார்ச் 2023ல் செலவின நிலுவைகள் அதிகபட்சமாக ரூ.30 பில்லியன் | Mar-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| மார்ச் 2023க்குள் நிதியல்லாத பொதுத்துறை மற்றும் மத்திய வங்கியின் புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ரூ.0 | Mar-23 | தெரியவில்லை |
| மார்ச் 2023க்குள் சமூக செலவிடல் மொ.உ.உற்பத்தியின் 0.1 சதவீதம் (ரூ.35 பில்லியன்) | Mar-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| மார்ச் 2023க்குள் ஆரம்ப நிலுவை மொ.உ.உற்பத்தியின் குறைந்தபட்சம் 0.2 சதவீதம் (-ரூ 56 பில்லியன்) | Mar-23 | பூர்த்தி செய்யப்பட்டது |
| ஜுன் 2023க்குள் ஆரம்ப நிலுவை குறைந்தபட்சமாக மொ.உ.உற்பத்தியின் 0.4 சதவீதம் (-ரூ 113 பில்லியன்) | Jun-23 | தெரியவில்லை |
| ஜுன் 2023ல் செலவின நிலுவைகள் அதிகபட்சமாக ரூ.0 பில்லியன் | Jun-23 | தெரியவில்லை |
| ஜுன் 2023க்குள் நிதியல்லாத பொதுத்துறை மற்றும் மத்திய வங்கியின் புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ரூ.0 | Jun-23 | தெரியவில்லை |
| ஜுன் 2023க்குள் சமூக செலவிடல் மொ.உ.உற்பத்தியின் 0.2 சதவீதம் (ரூ.70 பில்லியன்) | Jun-23 | தெரியவில்லை |
| செப்டெம்பர் 2023ல் செலவின நிலுவைகள் அதிகபட்சமாக ரூ.0 பில்லியன் | Sep-23 | நிலுவையில் உள்ளது |
| செப்டெம்பர் 2023க்குள் நிதியல்லாத பொதுத்துறை மற்றும் மத்திய வங்கியின் புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ரூ.0 | Sep-23 | நிலுவையில் உள்ளது |
| செப்டெம்பர் 2023க்குள் சமூக செலவிடல் மொ.உ.உற்பத்தியின் 0.4 சதவீதம் (ரூ.120 பில்லியன்) | Sep-23 | நிலுவையில் உள்ளது |
| செப்டெம்பர் 2023க்குள் ஆரம்ப நிலுவை மொ.உ.உற்பத்தியின் குறைந்தபட்சம் 0.5 சதவீதம் (-ரூ 160 பில்லியன்) | Sep-23 | நிலுவையில் உள்ளது |
| டிசம்பர் 2023க்குள் நிதியல்லாத பொதுத்துறை மற்றும் மத்திய வங்கியின் புதிய வெளிநாட்டுக் கொடுப்பனவு நிலுவைகள் ரூ.0 | Dec-23 | நிலுவையில் உள்ளது |
| சம்பர் 2023ல் செலவின நிலுவைகள் அதிகபட்சமாக ரூ.0 பில்லியன் | Dec-23 | நிலுவையில் உள்ளது |
| 2023 டிசம்பருக்குள் சமூக செலவிடல் மொ.உ.உற்பத்தியின் 0.6 சதவீதம் (ரூ.187 பில்லியன்) | Dec-23 | நிலுவையில் உள்ளது |
| 2023 டிசம்பருக்குள் ஆரம்ப நிலுவை மொ.உ.உற்பத்தியின் குறைந்தபட்சம் 0.7 சதவீதம் (-ரூ 209 பில்லியன்) | Dec-23 | நிலுவையில் உள்ளது |


மூலம் பன்னாட்டு நாணய நிதியம் மற்றும் இலங்கை "விரிவாக்கப்பட்ட நிதி வசதியின் கீழ் விரிவாக்கப்பட்ட ஏற்பாட்டைப் பெறுவதற்கான கோரிக்கை— ஊடக வெளியீடு; அலுவலர் அறிக்கை; மற்றும் இலங்கைக்கான நிறைவேற்றுப் பணிப்பாளரின் அறிக்கை"

All Rights Reserved © 2023
Verité Research

# 4. பற்றாக்குறை மற்றும் கடன்

All Rights Reserved © 2023


# கடந்த மூன்று ஆண்டுகளில் வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறை அதிகமாக உள்ளது




மூலம்: இலங்கை மத்திய வங்கி, ஆண்டறிக்கை (2022)

All Rights Reserved © 2023
Verité Research

# தேர்தல் நடைபெறும் ஆண்டுகளில் இலங்கையின் வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறை அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது




மூலம்: இலங்கை மத்திய வங்கி 2019

All Rights Reserved © 2023
Verité Research

# பற்றாக்குறைகளால் ஏற்படும் விளைவுகள் என்ன மற்றும் அது குறித்து நாம் ஏன் கவனத்தில் கொள்ள வேண்டும்?

குறைந்த வருமானம் + அதிக செலவினம்

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகள்

நிலுவையில் உள்ள கடன்களுக்கு அதிக வட்டி

வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளுக்கு நிதியளித்தல் (கடன் பெறுதல்)

உள்நாட்டு மூலங்கள் மூலம் கடன் பெறுதல்

வெளிநாட்டு மூலங்கள் மூலம் கடன் பெறுதல்


உள்நாட்டுக் கடன் அதிகரிப்பதால் உள்நாட்டு வட்டி விகிதங்களை அதிகரிக்க வேண்டிய அழுத்தம் ஏற்படுகிறது

வெளிநாட்டுக் கடன் அதிகரிப்பதால் நாணயப் பெறுமதியில் ஏற்படும் சரிவு போன்ற வெளிப்புற அதிர்ச்சிகளுக்கு ஆளாக நேரிடும்

© Verité Research 2021. Access given to participants only. Please do not circulate.

# மொ.உ.உற்பத்தியில் இலங்கையின் பொதுப் படுகடன் தொடர்ச்சியாக அதிகரித்துள்ளது


## பொதுப் படுகடன் (ஐ.அ.டொ பில்லியனில் மற்றும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக)




மூலம்: நிதியமைச்சு 2022 ஆண்டறிக்கை

PUBLIC FINANCE .lk

## மொத்தப் பொதுப் படுகடன்: மொத்தப் பொதுப் படுகடன்களில் திறைசேரி முறிகள் 37 சதவீதமானவை (2022 இறுதியில்)






மூலம்: இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2015-2021 | நிதியமைச்சு பொதுப் படுகடன் சுருக்கங்கள்

குறிப்பு: 1 ஐ.அ.டொ = ரூ.363.1

## மே 2022ல் இலங்கை கடனைத் திருப்பிச் செலுத்தாதன் பின்னர் உள்நாட்டுக் கடனானது பெறுமதியிலும் மொ.உ.உற்பத்தியின் சதவீதமாகவும் குறிப்பிடத்தக்க அளவு அதிகரித்துள்ளது

*2022ல் உள்நாட்டுக் கடன் 35% ஆல் அதிகரித்துள்ளது*








*மூலம்: இலங்கை மத்திய வங்கி*


© Verité Research 2021. Access given to participants only. Please do not circulate.

# வெளிநாட்டுக் கடன்: பலதரப்பு மற்றும் இருதரப்புக் கடன்கள் (2022)

## பலதரப்பு கடன் விபரம்




## இருதரப்பு கடன் விபரம்




**பலதரப்புக் கடன்கள்:**
பலதரப்புக் கடன் என்பது பன்னாட்டு நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி அல்லது கடன் வழங்கும் நாடுகளின் குழு போன்ற சர்வதேச நிதி நிறுவனங்களில் இருந்து ஒரு அரசாங்கம் பெறும் கடன் பலதரப்புக் கடன் எனப்படுகிறது


**இருதரப்புக் கடன்கள்:**
இரு நாடுகளின் அரசாங்கங்களுக்கு இடையே பெற்றுக்கொள்ளப்படும் கடன் இருதரப்புக் கடன் எனப்படுகிறது.

*மூலம்: இலங்கை மத்திய வங்கி*

© Verité Research 2021. Access given to participants only. Please do not circulate.

# சக நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் கடன் உயர் மட்டத்தில் உள்ளது

## மொ.உ.உற்பத்தியின் சதவீதமாக அரச கடன்




*மூலம்: இலங்கை மத்திய வங்கி, பன்னாட்டு நாணய நிதியம்*

© Verité Research 2021. Access given to participants only. Please do not circulate.

# இலங்கை மத்திய வங்கியின் கடன் மறுசீரமைப்பு உத்தி

| | 2022 நிலை | | DSA இலக்கு |
|---|---|---|---|
| **மொ.உ.உற்பத்தியில் பொதுப் படுகடன்** | மொ.உ.உற்பத்தியில் 128 % | 2032 | மொ.உ.உற்பத்தியில் 95 சதவீதத்திற்கும் குறைவாக |
| **மொத்த நிதியியல் தேவைகள்** *(GFN)* *(Gross Financing Needs)* | மொ.உ.உற்பத்தியில் 34.6 % | 2027 -32 | மொ.உ.உற்பத்தியில் 13 சதவீதத்திற்கும் குறைவாக (வருடாந்த சராசரி) |
| **வெளிநாட்டுக் கடன் நிதியளிப்பு** *(Foreign Debt Servicing)* | மொ.உ.உற்பத்தியில் 9.4 % | 2027 -32 | மொ.உ.உற்பத்தியில் 4.5 சதவீதத்திற்கும் குறைவாக (வருடாந்த வரம்பு) |
| **வெளிப்புற நிதியளிப்பு இடைவெளி** *(External Financing Gap)* | 2022-27 காலப்பகுதியில் கடன் சேவைக் குறைப்பு வெளிப்புற நிதியளிப்பு இடைவெளியான ஐ.அ.டொ 16.9 பில்லியனை நிவர்த்தி செய்ய வேண்டும் | | |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

All Rights Reserved © 2023
Verité Research

# நன்றி

All Rights Reserved © 2023
Verité Research